## மார்ச் – 02 – வியாழன்

**புனித சிம்பிளிசியுஸ்**

**நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார்: பொல்லாரின் வழியோ அழிவைத் தரும். திபா. 1:6**

----------------------------------------------------------------------------------------------------

### முதல் வாசகம்: இனைச் சட்டம் 30:15 – 20

இறைவனாகிய ஆண்டவர் கூறுவதாவது: இதோ பார், வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன். அது இதுதான் இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உன் கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு. அவரைப் பின்பற்றி அவரது வழியில் நட. அவரது கட்டளைகளையும், நியமங்களையும், முறைமைகளையும் கடைப்பிடி. அப்போது நீ வாழ்வாய், நீ பலுகுவாய். நீ உடைமையாகக் கொள்ளப்போகும் நாட்டில் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசிவழங்குவார். ஆனால், உனது உள்ளம் விலகிச்சென்று, நீ செவிகொடாமல் கெட்டலைந்து, வேறு தெய்வங்களை வணங்கி, அவற்றுக்குப் பணிவிடை புரிந்தால், இன்று நான் உனக்கு அறிக்கையிட்டுக் கூறுகிறேன். நீ நிச்சயம் அழிந்துபோவாய். நீ உரிமையாக்கிக் கொள்ளுமாறு, யோர்தானைக் கடந்து சென்றடையும் பூமியில் உன் வாழ்நாள் நீடித்திருக்காது. உன்மேல் இன்று நான் விண்ணையும் மண்ணையும் சான்றாக அழைத்து, வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும் உனக்கு முன் வைக்கிறேன். நீயும் உனது வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்துகொள். கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு அவரது குரலுக்குச் செவிகொடு அவரையே பற்றிக் கொள். ஏனெனில், அவரே உனது வாழ்வு அவரே உன் நீடிய வாழ்வு. அதனால், ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு என்னும் உன் மூதாதையருக்குக் கொடுப்பதாக ஆண்டவர் ஆணையிட்டுக் கூறிய நாட்டில் நீ குடியேறுவாய்.

**பதில்பாடல் :** ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோர் பேறு பெற்றோர்

### நற்செய்தி: லூக்கா 9: 22 - 25

அந்நாட்களில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது, ”மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும்” என்று சொன்னார். பின்பு அவர் அனைவரையும் நோக்கி, ”என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில், தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார். என்பொருட்டுத் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வார். ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?

**தியானம்:** இறைவன் எமக்குக் கொடுத்த கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழும் பொழுது, நாங்கள் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டு பல்கிப்பெருகி நீடூழிகாலம் அவருக்கேற்ற உண்மை வாழ்வு வாழ்வோம என்பதை இன்றைய வாசகம் கூறுகின்றது. இவ்வாறு வாழும் பொழுது நீரோடை நடப்பட்ட மரம்போல் பருவகாலங்களில் கனிதந்து என்றும் பசுமையாய் இருப்போம். (திருப்பாடல் 1:4) இன்று நாங்களும் இறைவனுக்கேற்ற வகையில் அவர் எமக்குக் கொடுத்த கட்டளைகளை கடைப்பிடித்து பசுமையுடன் பல்கிப்பொருகி இறையாசீர் பெற்று வாழ அழைக்கப்பட்டுளோம். ஆனால் நாங்களோ உலக காரியங்கள் மாயக் கவர்ச்சிகள் இவைகளுக்கு அடிமையாகி விடுகின்றோம். இருப்பினும் இறைவன் எம்மேல் கொண்ட அன்பின் நிமித்தம் தனது மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவரும் நான் துன்பப்பட்டு, அவமானப்பட்டு, மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று தனது மரணத்தை முதன்முறையாக அறிவிக்கின்றார். (லூாக்.9:22) எனவே தான் தன்னோடு துன்பத்தில் பங்குகொண்டு தன்னைப் பின்தொடர்பவர்கள் எல்லோரும் தன்னலம் துறந்தவர்களாய் நாள்தோறும் சிலுவையை சுமக்கட்டும் என்று கூறுகின்றார். நாங்கள் எங்களை ஆராய்து பார்ப்போம். நாங்கள் கடவுளின் அன்பிற்கு அடிமைப்பட்டுள்ளோமா? அல்லது உலக மாயகவர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுள்ளோமா? ஏனெனில் கடவுளை அன்பு செய்து ஏற்று வாழும் பொழுது பல துன்பங்கள், வேதனைகள் ஏற்படத்தான் செய்யும். இருப்பினும் அவை யாவற்றையும் ஏற்றுக்கொண்டு தன்பின்னே வரும்படியாக அவர் அழைக்கின்றார். அப்பொழுது ஏற்படும் சுமைகள் எளிதானதாகவே இருக்கும். ஆனால் உலக மாயக்கவர்சிக்கு அடிமைப்பட்டு வாழ்வோமேயானால் இறைவனின் ஆசீர்வாதங்கள் யாவற்றையம் இழந்தவர்களாக எம்மையே நாங்களே அழித்துவிடுவோம். எனவே அவ்வாறு வாழாமல் இறைவனின் கட்டளைகளையும், நியமங்களையும் கடைப்பிடித்து உண்மை வாழ்வு வாழ்வோம்.